## பெலிஅத்த பிரதேச சபை
## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பெலிஅத்த பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,750,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அட்டவணைகள் கிடைத்த பின்னர் சிட்டையிடல் ஆரம்பிக்கப்படுகின்றது மற்றும் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | முன்னைய ஆண்டு தொடர்பாக பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,253,805 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டதுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காத 04 நிர்மாண வேலைகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 26,475,997 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 02 செயற்திட்டங்களுக்காக வருட இறுதி அளவில் மதிப்பீடுகள் அங்கீகரித்திருக் காமையால் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாத போதிலும் கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்ட தெனவும், வெள்ளத்தினால் அனர்த்தத்துக் குள்ளாகிய பொதுமக்களுக்கு உதவி வழங்குவதற்காக கிடைத்த நிதியிலிருந்து மேலும் நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்கும், |

| | | |
|---|---|---|
| | | புகையிரதப் பாதை செயற்திட்டத்தின் காரணமாக சேதமடைந்திருந்த பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் கடன்கொடுத்தோர் ஒதுக்கப்பட்டது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 112,352,590 தொகைக்கான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 809,322 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பான துணைப் பதிவேடுகள் சரியாக சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வித்தியாசத்தை பரிசோதனை செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 284,753,737 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்குமீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | தற்போது நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்படுவதுடன் மற்றும் விரிவான அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் எதிர்காலத்தில் சமர்பிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கு காரணங்களைக் காட்டும் கூற்று ஒன்று தயாரித்து எதிர்காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணம் | | | |
| | i. நி.பி. 134(3) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | ii. நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஜனவரி 30 திகதி PFD /RED /COPA/ 2019/01 இலக்கங் கொண்ட கடிதத்தின் பந்தி 04 | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கை வருடாந்தம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபபா/ பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை பந்தி 04 | சபைக்குச் சொந்தமான 07 கடையறைகளில் இருந்து ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 1,273,000 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 475,000 தொகை அறவிடப் பட்டுள்ளது எனவும், ரூபா 438,000 தொடர்பாக விசாரனை உத்தியோகத்தர்களால் விசாரனை ஆரம்பித்துள்ளது எனவும் அறிவிக்கின்றேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,882,989 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,090,076 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதி யில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,101,840 | 2,898,745 | 1,998,681 | 1,365,625 | 1,991,590 | 1,977,986 | 1,156,276 | 1,724,741 |
| வாடகை | 11,958,458 | 9,600,147 | 10,088,708 | 1,955,013 | 9,458,458 | 8,512,046 | 8,256,408 | 1,610,164 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,863,850 | 1,115,687 | 1,544,292 | 178,900 | 3,616,050 | 2,175,027 | 2,113,989 | 90,600 |
| ஏனைய வரு மானங்கள் | 25,333,650 | 17,932,391 | 1,461,860 | 68,138,049 | 88,890,716 | 71,866,661 | 57,241,166 | 34,114,397 |
| மொத்தம் | 43,257,798 | 31,546,970 | 15,093,541 | 71,637,586 | 103,956,814 | 84,531,720 | 68,767,839 | 37,539,902 |

### 2.2.2 வீதிவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி ரூபா 1,344,525 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், பெற வேண்டிய மீதியில் 02 வருடங்களுக்கும் 05 வருடங் களுக்கும் இடைப்பட்ட மீதி மற்றும் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதிகள் முறையே ரூபா 409,137 தொகை மற்றும் ரூபா 286,930 தொகைகள் காணப்பட்டன. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | நிலுவையில் ரூபா 144,644 தொகை அறவிடப்பட்டுள்ள துடன், எதிர்காலத்தில் ஆதனங்களை தடைசெய்து பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய கடையறை வாடகை ரூபா 582,665 தொகை காணப்பட்டதுடன், அம்மீதியில் 02 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 202,710 தொகை காணப்பட்டது. | நிலுவை கடை வாடகை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடை வாடகையில் ரூபா 392,072 தொகை கிடைத்துள்ள துடன் ரூபா 156,160 தொகையினை பதிவழிப் பதற்காக ஆளுனருக்கு அனுப்புவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய சந்தை குத்தகை மற்றும் வாகன வாடகை முறையே ரூபா 255,459 தொகை மற்றும் ரூபா 1,116,889 தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் படி நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வாகன வாடகையில் ரூபா 70,250 தொகை கிடைத்திருந்த துடன், பல வருட காலம் முதல் காணப்படும் நிலுவை மீதி தொடர்பாக சபைக்குச் சமர்பித்து தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும், சந்தை குத்தகை தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வியாாபார வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் முறையே ரூபா 170,300 மற்றும் ரூபா 2,500 தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், வியாபார வரி மீதியில் 02 வருடங்களுக்கும் 03 வருடங் களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 51,500 தொகையாகும். | நிலுவை அனுமதிப்பத்திர கட்டண வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வியாபார வரி மீதியில் ரூபா 78,000 தொகை அறவிடப்பட்டுள்ளதெனவும், மீதியான நிலுவைக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க | முத்திரைக் கட்டண நிலுவையில் ரூபா 7,800,000 தொகை அறவிடப்பட்டு ள்ளதுடன் மீதித் தொகை மற்றும் நீதி மன்றத் தண்டப்பணத்தை பெற்றுக் |

| | | |
|---|---|---|
| முறையே ரூபா 766,291 தொகை மற்றும் ரூபா 65,751,897 தொகைகள் காணப்பட்டன. | வேண்டும். | கொள்ளவதற்காக பிரதான செயலாளருக்கு விண்ணப்பித்துள்ளேன் என அறிவிக்கின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 கீழ் காணப்பட்ட 30 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்காக துணை விதிகள் ஆக்கவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் 29 விடயங்களுக் காக துணை விதிகள் ஆக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**(ஆ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை செயற்திட்டத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையினை அபிவிருத்தி செய்யும் செய்பணிக்காக ரூபா 202,400 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றிருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைப் பயன்படுத்தப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் உரிய தரத்தில் காணப்படாமையால் செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாமையினால் கைவிடப்பட்டிருந்தது. | சாத்தியக் கூறு ஆய்வு ஒன்றின் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(இ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கியுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 8,500,000 தொகைக்கான 17 அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பாதீட்டில் உள்ளடங்கிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதில் செலுத்த வேண்டும். | சில பாதைகள் பிரதேச செயலகத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், சபையின் நிதி நிலைமையை கவனத்தில் எடுத்து ஒரு திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்ட தெனவும், அறிவிக்கின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெருங்கும் முன்னேற்ற த்தை அளவை செய்ய வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன், தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்கள் பயிற்சி ஒன்று பெற்றிருக்காமையால் தயாரித்தல் தமாதமாகியது என அறிவிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு உரித்தான 06 வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களுக்காக வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | ஒரு வாகனத்திற்காக லீஸிங் வசதிகள் காணப்படுகின்றது எனவும், மேலும் ஒரு வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கும், 02 வாகனங்களை திருத்திய பின்னர் உரித்தாக்கு வதற்கும் மற்றும் மீதியான வாகனங்களை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், உரித்தாக்கிய பின்னர் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொள்வனவு செய்யும் தேவையை உரிய முறையில் இனங்காணாமல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் கொள்வனவு செய்துள்ள ரூபா 720,000 தொகை பெறுமதியான 04 முகாமைத்துவ தகவல் முறைமைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் செயற்படாமல் காணப்பட்டது. | முகாமைத்துவ தகவல் முறைமையை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்காக சூரியவெவ பிரதேச சபையின் கொள்வனவை அடிப்படையாக கொண்டு ஹம்பாந்தோட்டை உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் தகவல் முறைமை கொள்வனவு செய்யப் பட்டதுடன், தற்போது இம் முறைமை செயற்படுத்தப் பட்டுக் காணப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |
| (இ) | நிறுவனத்தின் அனைத்து தரவுகள் மற்றும் தகவல்கள் சேவை வழங்குனர்களின் ஸேவர் கணினியில் சேமிக்கப்பட்டமையால் சபையின் தரவுகள் மற்றும் தகவல்களின் பாதுகாப்பு, இரகசியத்தன்மை மற்றும் பிழையற்ற தன்மை தொடர்பாக ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டது. | சபையின் தகவல்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளூராட்சி ஆணையாளரை வினவி இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2014 ஆண்டின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து கிடைத்திருந்த 600 கொடிக் கம்பங்களில் 279 கொடிக் கம்பங்கள் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட போதிலும் அவற்றை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014 ஆண்டின் போது சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் விஹாரைகளுக்கும், சில பாடசாலைகளுக்கும், சில பொது இடங்களுக்கும் கொடிக் கம்பங்கள் வழங்கப்பட்டன எனவும், எதிர்காலத்தில் களஞ்சிய பதிவேடுகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i. | பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளனித் திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்கள் மற்றும் 22 மிகைகளை முறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கனிஷ்ட பதவியணி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்தல் திறைசேரி செயலாளர் மற்றும் நிதி மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் DHS/Cir/2020 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் |

| | | |
|---|---|---|
| | | பின்னர் ஆட்சேர்க்கப்படும் எனவும் மற்றும் தென்மாகாண முதலமைச்சுச் செயலாளரினால் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களை நிரப்புமாறு அறிவித்துள்ளேன். மிகை உத்தியோகத்தர்கள் தற்போது இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர் என அறிவிக்கின்றேன். |
| ii. 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனிதவள திட்டம் ஒன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய உடன்படிக்கை மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 திசெம்பர் 20 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மனிதவள அபிவிருத்தித் திட்டம் அங்கீகரிக்கபட்டு இருக்கின்றது என அறிவிக்கின்றேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 08 ஊழியர்களிடம் பெற வேண்டிய ரூபா 781,689 தொகையினை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊளியர் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது குறிப்பிட்ட நபர்களிடம் மாதாந்தம் பணம் அறவிடப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 37,078,994 தொகைக்கான சபைக்கு சொந்தமான 13 வாகனங்களின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு வாகனத்திற்காக லீஸிங் வசதிகள் காணப்படுவதுடன், ஒரு வாகனத்தை அப்புறப்படுத்து வதற்கும் 02 வாகனங்களை திருத்திய பின்னர் உரித்தாக்குவதற்கும் மீதியான வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உரித்தாக்கிய பின்னர் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.4.2 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் கொங்கிரீட் கல் உற்பத்தி வேலைத்தளத்தில் மற்றும் தும்பு ஆலைக்குரிய 02 மோட்டர்கள், 1000 லீற்றர் தொட்டியொன்று மற்றும் கொங்கிரீட் கல் உற்பத்தி செய்யும் இயந்திரம் என்பன பலவருட காலமாக விளைவற்று காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தும்பு உற்பத்தி நிறுத்தப் பட்டமையால் 02 மோட்டர்களும் புவக்தன்டாவ களஞ்சியத்தில் காணப்படுவதுடன், கொங்கிரீட் கல் உற்பத்தி தரப் பரிசோதனையில் தோல்வியடைந்தமையால் கொங்கிரீட் கற்களை சந்தைப்படுத்த முடியாது போனதுடன் செயற்திட்டத்தை செயற்படுத்தவில்லை என அறிவிக்கின்றேன். |

### 3.4.3 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 4,455,200 தொகைக்கான சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் பலவருட காலமாக பயன்படுத்தப் படாதிருந்ததுடன் அவற்றை திருத்துவற்கு அல்லது அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கப் வண்டியை திருத்துவது ஆக்கபூர்வமானதாக காணப்படாமையால் பதிவு செய்யப்பட்ட உரிமை காணப்படும் நிறுவனத்திற்கு உரித்தாக்குவதற்கும், மேலும் ஒரு கப் வண்டியின் திருத்த வேலை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மீதியாக உள்ள கப் வண்டியை திருத்த வேலை செய்ய முடியுமாக என பரிசோதனை மேற்கொண்டு அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |